| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| முதன்மைக் கல்வி அலுவலர்,<br>எழும்பூர்,<br>சென்னை-8. | அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி<br>அலுவலர்கள், |

ந.க.எண்: 111/ஆ6/2023 நாள்: 01/02/2024

அய்யா/அம்மா,

**பொருள்:** தமிழ்நாடு பள்ளிக்கல்வி - உடற்கல்வி - 2023-2024 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகள் (கடற்கரை கையுந்துபந்து மற்றும் நீச்சல்) 07/02/24 முதல் 10/02/24 வரை சென்னையில் நடைபெறும் தகவல் அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவித்தலும், மேலும், அட்டவணையில் காணும் தங்கள் மாவட்டம் சார்ந்த நடுவர்களாக நியமிக்கப்பட்ட உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை குறிப்பிட்ட நாட்களுக்கு பணிவிடுவிப்பு செய்து அனுப்பிடக் கோருதல்-சார்பு.

**பார்வை:**
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள். ந.க.எண்: 34753/எம்/இ4/2023, நாள்:22.12.2023
2. முதன்மை உடற்கல்வி ஆய்வாளரின் செயல்முறைகள். ந.க.எண்: 49755CIPE/2023, நாள்: 05-09-2023

மேற்காண் பொருள் மற்றும் பார்வைகளின்படி, 2023-2024 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகளை(**கடற்கரை கையுந்துபந்து மற்றும் நீச்சல்**) சென்னை மாவட்டம் சார்பில் **07/02/24 முதல் 10/02/24** வரை நடத்துவதற்கு, மரியாதைக்குரிய தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

இவற்றில் **கடற்கரை கையுந்துபந்து போட்டி**, செங்கல்பட்டு மாவட்டத்தில் **புனித வளனார் மேல் நிலைப்பள்ளி (St. JOSEPH HSS, KOVALAM), கோவளத்திலும், நீச்சல் போட்டி சென்னை, வேளச்சேரி, த.வி.மே.ஆ., ஆணைய நீச்சல் குளத்திலும் (SDAT AQUATIC COMPLEX)** நடைபெறவுள்ளது.

மேலும், அட்டவணையில் காணும் தங்கள் மாவட்டம் சார்ந்த, நடுவர்களாக நியமிக்கப்பட்ட உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை 06/02/24 முதல் 10/02/24 **வரை** பணிவிடுவிப்பு செய்து அனுப்பிடவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1.2.24

**இடம் : சென்னை**
**நாள் :** 01-02-2024

**முதன்மைக்கல்வி அலுவலர்,**
***சென்னை.***

நகல்:

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு (ஆண்கள்/பெண்கள்) தகவலுக்காக அன்புடன் அனுப்பலாகிறது.
3. அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு மேல்நடவடிக்கைக்காக அன்புடன் அனுப்பலாகிறது.

***தொடர்பு எண்கள்:***

**கடற்கரை கையுந்துபந்து போட்டிகளுக்குவிசாரணை உதவிக்கு;**

| வ.எண் | ஆசிரியர் பெயர்: | பணியிடம் | கைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | திரு. புஷ்பராஜ் திஉ.க.ஆ. | புனித வளனார் பே.நி.பள்ளி, கோவளம். | 82482 79173 |
| 2 | திரு. பாஸ்கர் ஆனந்த் உ.க.இ., | தூய மரியன்னை மே.நி.பள்ளி, பாரிமுனை. | 82485 36154 |

**நீச்சல் போட்டிகளுக்கு விசாரணை உதவிக்கு;**

| வ.எண் | ஆசிரியர் பெயர்: | பணியிடம் | கைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | திரு.குகப்ரியன், உ.க.ஆ., | கேசரி மேல்நிலைப்பள்ளி, மயிலாப்பூர் | 70104 78237 |
| 2. | திருமதி.ஃபிரீடாதங்கமணி, உ.க.ஆ., | சௌந்ரபாண்டி சுப்பம்மாள் மே.நி.பள்ளி, ராயபுரம். | 97911 56051 |

**பேருந்து வழித்தடங்கள் விபரம்:புனித வளனார் மே.நி.பள்ளி, கோவளம்,**

**(ST.JOSEPHH.IGHER SECONDARY SCHOOL, KOVALAM.).**

| இருந்து---------வரை | பேருந்நு வழித்தட எண் |
|---|---|
| பாரிமுனை ----கோவளம் | 109 |
| தாம்பரம் ----கோவளம் | 515A, 564B, 517k |
| மகாபலிபுரம் ---கோவளம் | 588 |
| திருவான்மியூர் –கோவளம் | 109cross, 109x 109t,515, 588, 588cross |

**இறங்குமிடம்: கோவளம் பிரிவு,அங்கிருந்து 500 மீட்டர் மட்டுமே**

நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள (வெளிமாவட்ட) ஆசிரியர்கள் பெயர் பட்டியல்

| வ.எண் | ஆசிரியர் பெயர் திரு/திருமதி | நடுவராக பணியாற்றவுள்ள ஆசிரியர்பணிபுரியும் பள்ளி | பணியிலுள்ள மாவட்டம் |
|---|---|---|---|
| | கடற்கரை கையுந்து போட்டி நடுவர்கள் | | |
| 1 | கண்ணன், தமிழாசிரியர் | ஜே.ஜி.நேஷ்னல் மே.நி.பள்ளி, | செங்கல்பட்டு |
| 2 | முருகதாஸ், உ.க.ஆ. | அ.மே.நி.பள்ளி, மாவட்ட ஆட்சியர் காலனி. | செங்கல்பட்டு |
| 3 | சரத்பாபு உ.க.ஆ. | சி.எஸ்.ஐ. மே.நி.பள்ளி, மேல்ரோசாபுரம். | செங்கல்பட்டு |
| 4 | வெற்றிவேந்தன், உ.க.ஆ., | அ.மே.நி.பள்ளி, அனகாபுத்தூர். | செங்கல்பட்டு |
| 5 | தியாகராஜன், உ.க.ஆ., | அ.மே.நி.பள்ளி, கேளம்பாக்கம் | செங்கல்பட்டு |
| 6 | பாலகிருஷ்ணன், உ.க.ஆ., | அ.உ..நி.பள்ளி, கச்சைகட்டி, | மதுரை |
| 7 | ஆண்டனி ரிச்சர்ட் ரீகன், உ.க.ஆ., | ஓ.எல்.எச்.ஏ மே.நி.பள்ளி, வேளாங்கண்ணி. | நாகபட்டிணம் |
| 8 | மணியரசன், உ.க.ஆ., | அ.மே.நி.பள்ளி, அக்கரைப்பட்டி | நாகபட்டிணம் |
| 9 | ரா.நாகனாதன், உ.க.ஆ., | அ.மே.நி.பள்ளி, பார்த்திபனூர். | இராமநாதபுரம் |
| 10 | தமிழரசன், உ.க.இ., | அ.மே.நி.பள்ளி, மண்டபம், | இராமநாதபுரம் |
| 11 | ராஜா, உ.க.இ., | அ.மே.நி.பள்ளி, பளுகல், | கன்னியாகுமரி |
| 12 | ரவி, உ.க.ஆ., | அப்பர்மே.நி.பள்ளி, கருப்பாயூரணி, | மதுரை |
| 13 | கார்த்திக், உ.க.ஆ., | இ.பி.ஜி. மெட்.மே.நி.பள்ளி, மூன்றுமாவடி, | மதுரை |
| 14 | சசிகுமார், உ.க.ஆ., | ஊ.ஒ.ந.நி.பள்ளி, தேனூர், | மதுரை |
| 15 | பாலகிருஷ்ணன், உ.க.ஆ., | செங்குந்தர் உ.நி.பள்ளி, தல்லாகுளம், | மதுரை |
| 16 | கணேசன், உ.க.ஆ., | ஊ.ஒ.ந.நி.பள்ளி., கிடாரிபட்டி. | மதுரை |
| 17 | கே.அருணா, உ.க.இ., | அ.மே.நி.பள்ளி, சாம்பவர் வடகரை, | தென்காசி |
| 18 | மகேஸ், உ.க.ஆ., | எஸ்.எஸ்.வி.மே.நி.பள்ளி, மாதாபட்டிணம். | தென்காசி |

| | | | |
|---|---|---|---|
| 19 | செல்வம், உ.க.ஆ., | மாநகராட்சி ஜெயபிரகாஷ் ந.நி.பள்ளி, | கரூர் |
| 20 | சந்தோஷ்குமார், உ.க.ஆ., | அ.உ.நி.பள்ளி, காவல்காரன்பட்டி. | கரூர் |
| 21 | ஸ்டாலின், உ.க.ஆ,. | அ.மே.நி.பள்ளி, வலசையூர். | ஈரோடு |
| 22 | நடராஜு, உ.க.ஆ., | அ.கே.நி.பள்ளி, கஞ்சிகோயில். | ஈரோடு |
| 23 | சிவக்குமார்,உ.க.ஆ., | அ.மே.நி.பள்ளி, கெட்டிசோவியூர் | ஈரோடு |
| 23 | கலைச்செல்வன், உ.க.ஆ., | நசரேத் மெட்.மே.நி.பள்ளி, திருவள்ளூர். | திருவள்ளூர். |
| 24 | சைமன்பிரபு, உ.க.ஆ., | வனத்துறை மே.நி.பள்ளி, நல்லிவாசல். | திருப்பத்தூர் |
| 25 | கணேஷ், உ.க.ஆ., | அ.மே.நி.பள்ளி, உடுக்கம்பாளையம் | திருப்பூர் |
| 26 | இளவரசன் | அ.மே.நி.பள்ளி, நாகமங்கலம், | அரியலூர் |

அறிவுரைகள்:

## <u>2023-2024 ஆம் ஆண்டுக்கான சென்னை மாவட்டம் நடத்தும் புதிய விளையாட்டுகள் கடற்கரை கையுந்துபந்து மற்றும் நீச்சல் போட்டிக்கான அறிவுரைகள்.</u>

1. முதல் இரண்டு நாட்கள் (07.02.24 & 08.01.24) மாணவிகளுக்கும், அடுத்த இரண்டு நாட்கள் (09.02.24 & 10.02.24) மாணவர்களுக்கும் போட்டி நடைபெறும்.
2. கடற்கரை கையுந்துபந்து போட்டிக்கு மாணவிகளுக்கான பதிவு (REGISTRATION) 06/02/24 மாலை 5.00 மணி முதல் பள்ளியில் நடைபெறும். மாணவர்களுக்கு பதிவு(REGISTRATION) 08/02/24 மாலை 5.00 மணி முதல் பள்ளியில் நடைபெறும்.
3. நீச்சல் போட்டிக்கு மாணவிகளுக்கான பதிவு(REGISTRATION) 06/02/24 மாலை 5.00 மணி முதல் நீச்சல் குள வளாகத்தில்நடைபெறும். மாணவர்களுக்கு பதிவு(REGISTRATION) 08/02/24 மாலை 5.00 மணி முதல் நீச்சல் குள வளாகத்தில்நடைபெறும்.
4. அணி மேலாளர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அறையில் விளையாட்டு வீரர்,வீராங்கனைகளுடன் மட்டுமே தங்குதல் வேண்டும். அணி மேலாளர் தவிர வேறு யாரும் உடன் தங்கவோ, உணவு அருந்தவோ அனுமதி இல்லை.

5. மாணவிகளுக்கு 06.02.24 இரவு முதல் உணவு வழங்கப்படும். மாணவர்களுக்கு 08.02.24 இரவு முதல் உணவு வழங்கப்படும்.

6. நீச்சல் போட்டிக்கு, மாணவிகள் அணி மேலாளர் கூட்டம் 06.02.24 அன்று மாலை 7.00 மணிக்கும், மாணவர்களின் அணி மேலாளர் கூட்டம் 08.02.24 அன்று மாலை 7.00 மணிக்கும் வேளச்சேரி நீச்சல் குளத்தின் பார்வேயாளர் இருக்கையில் நடைபெறும்.

7. கடற்கரை கையுந்துபந்து போட்டிக்கானமாணவிகள் அணி மேலாளர் கூட்டம் 06.02.24 அன்று மாலை 7.00 மணிக்கும், மாணவர்களின் அணி மேலாளர் கூட்டம் 08.02.24 அன்று மாலை 7.00 மணிக்கும் பள்ளி வளாகத்தில் நடைபெறும்,

8. அனைத்து போட்டியாளர்களும் தங்களின் பள்ளி நகலை (நுழைவுப்படிவம், தனி நபர் புகைப்பட அடையாளப்படிவம்) போட்டி முடியும் வரை உடன் வைத்திருத்தல் கட்டாயம் அவசியம். கேட்கும் போது காண்பிக்கவேண்டும்.

9. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அனுமதி பெற்று வரும் **உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர்** மட்டுமே அணி மேலாளராக பணியாற்ற அனுமதிக்கப்படுவர்.

10. பெண் போட்டியாளருடன் அணி மேலாளராக பெண் உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியரும், ஆண் போட்டியாளருடன் அணி மேலாளராக ஆண் உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியரும் மட்டுமே அவசியம் வர வேண்டும். **(அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களும் இதனை அவசியம் பின்பற்றிட வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்).**

11. மாணவிகள் 08.02.24 இரவு எக்காரணம் கொண்டும் தங்க அனுமதி இல்லை. ஏனெனில், மாணவர்கள் அதே இடத்தில் தங்கவேண்டிய சூழல் உள்ளது.**(மாணவிகள் போட்டி நடைபெறும் நாட்களில் மாணவர்களோ, மாணவர்கள் போட்டி நடைபெறும் நாட்களில் மாணவிகளோ, கண்டிப்பாக தங்கவைக்க அனுமதி இல்லை.)**

12. தங்குமிடத்தில் ரூபாய் 500/- காப்புத்தொகையாக செலுத்தி வெளியேறும்போது பெற்றுக்கொள்ளலாம். அறையை வழங்கும்போது இருந்தவாறு திரும்ப ஒப்படைக்க வேண்டும். சேதம் ஏற்படின் காப்புத்பொகை மீண்டும் தரப்படமாட்டாது.

13. கடற்கரை ஓரத்தில் பள்ளி உள்ளதால் மாணவ, மாணவியருக்கு தகுந்த அறிவுரை கூறி கவனமாகபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

14. காலை உணவு 8.00 மணி முதல் 9.00 மணி வரையும், மதிய உணவு 12.30.மணி முதல் 1.30 மணி வரையும் மற்றும் இரவு உணவு 7.00 மணி முதல் 8.00 மணி வரையும் வழங்கப்படும்.

15. குளிர் காலமாக இருப்பதால் போட்டியாளர்கள் தங்களுக்குத் தேவையான உடைமைகளை தாங்களே கொண்டுவருதல் அவசியம்.